04.08.2026

அ.வ.எண். 87/2024

வா.சா.1 – திரு. துரைராஜ் , த/பெ. சுப்பிரமணியன்

Solemnly affirmed and sworn by Tmt.A.Shanthi Assistant on 04.08.2026 is accordance with the provision of Act X of 3331

**<u>2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்து கையொப்பம் செய்தேனா என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அதில் உள்ள விவரங்கள் பற்றி தெரியாது. சாந்தாமணி எனது தாயார். என் தாயாருக்கு வழக்கு சொத்தில் பாதி பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். என் தகப்பனார் இறந்த பின்னிட்டு, என் தாயாருக்கு இந்து வாரிசுரிமை சட்டத்தின்படி பாதி பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். என் தாயார் தற்போது என்னுடன் உள்ளார் என்றால் சரிதான்.

2. என் தாயார் 24.08.2001 தேதியில் வழக்கு சொத்தை 1ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்ய ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.பிரதிவாதி என்ன எதிர்வாதம் எடுத்துள்ளார் என்று எனக்கு தெரியாது. நான் 1ம் பிரதிவாதி மீது சூலூர் காவல் நிலையத்தில் 2023 ல் புகார் கொடுத்தேன். அந்த புகாரை நான் தான் பெற்றேன். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் நான் கொடுத்தது என்றும், அதில் வழக்கு சொத்து பொறுத்து நானும், எனது அம்மாவும் ரூ.18 இலட்சத்திற்கு விலைபேசி ஒப்பந்தம் போட்டு கடந்த 24.08.2021 அன்று ரூ.10 இலட்சம் முன்பணமாக பெற்றுக்கொண்டேன் என சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. மேற்கண்டவாறு என் தாயாரும் ஒரு வாக்குமூலம் கொடுத்துள்ளார் மேற்படி விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

3. என் தாயார் மேற்படி புகாரில் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. நான் கொடுத்த புகார் எனக்கு நன்கு தெரியும் என்றும், வழக்கு

விவரங்கள் தெரிந்துவிடும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரின் பேரில், சூலூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் CC.No.26/2024 வழக்கில் நான் முதல் விசாரணை சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் CC.No.26/2024 வழக்கில் அ.சா.1 என்னுடைய முதல் விசாரணையில் எதிரி எங்கள் தறி குடோனில் அத்துமீறி நுழைந்து மேற்படி குடோனை தனக்கு கொடுக்குமாறு மிரட்டினார், தற்பொழுதும் எதிரி தறி குடோனில் தான் வசித்து வருகிறார் என சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லவில்லை.

4. என் தாயார், 1ம் பிரதிவாதியுடன் ஒப்பந்தம் ஏற்படுத்திகொண்ட விவரம் எப்போது தெரியவந்தது என்றால் பிரச்சனை ஏற்பட்டபோது தெரியவந்தது. வழக்கிற்காக முன்பாக தெரியவந்தது. 1ம் பிரதிவாதி தாவா சொத்தை பொறுத்து கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளார் என்றும், ரூ.10 இலட்சம் முன்பணம்கொடுத்துள்ளார் என்றும், நான் எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். பொய்யாக ஆவணம் ஏற்படுத்தி மிரட்டி வருகின்றனர், மேற்படி போலியான ஆவணம் ஏற்படுத்தப்பட்டபோது 2016 முதல் 2022 ஆண்டு வரை அசல் ஆவணம் SBI வங்கியில் MOD யில் இருந்தது.

5. நான் தறி குடோன் வைத்து தொழில் செய்வதற்காக கடன் பெற்றேன். SBI வங்கியில் உள்ள கடனை மீட்பதற்காக 1ம் பிரதிவாதியிடம் பணம் பெற்றுக்கொண்டு என் தாயார் ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மல்லிகா எனது சித்தி ஆவார். 1ம் பிரதிவாதி மல்லிகா எங்களுடன் பேச்சுவார்த்தையில் உள்ளார் என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி திருக்குமார் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவர் என்றால் தெரியாது. என்னுடைய மற்றொரு சித்தி வசந்தாமணி, ஆறுமுகம், நவீன்குமார் ஆகியோர் என் சித்தப்பா ஆறுமுகத்தை தகாத வார்த்தையால் திட்டியதால் அவர்கள் மீது தீண்டாமை மற்றும் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் புகார் கொடுத்து குற்ற எண்.58/2024 முதல் தகவல் அறிக்கை நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

6. மேற்படி விவரம் எனக்கு தெரியும் என்றும், வழக்கிற்காக மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தாயாரை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். என் தாயார் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்றும், அவரை சேர்க்காததால் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தற்போதும், திருக்குமார்(2 ம் பிரதிவாதி) தான் வழக்கு சொத்தை அனுபவம்செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நாங்கள் தான் அனுபவம் செய்து வருகிறோம். என் தாயர் 24.08.2021 ல் 2 ம் பிரதிவாதியிடம் ரூ.10 இலட்சம் முண்பணம் பெற்றுக்கொண்டார் என்றும், 16.12.2021 ல் ரூ.4,30,000/- பெற்றுக்கொண்டார் என்றும், 30.03.2022 ல் ரூ.4.50 இலட்சம் பணம் பெற்றுக்கொண்டு தாவா சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைத்தார் என்றால் இல்லை.கிரய ஒப்பந்த பரிவர்த்தனையை மறைத்து அது பரிவர்த்தனை என்பதை சாதகமாக்கி கொண்டு வா.சா.ஆ.2 பாகபாத்திய விடுதலை பத்திரம் ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரியல்ல.

7. என் தாயார் அவருக்கு பாத்தியப்பட்ட பங்கை பொறுத்து 2 ம் பிரதிவாதிக்கு ஒரு பொறுப்பு ஆவணம் ஏற்படுத்தி கொடுத்த பின்னிட்டு, வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்படுத்தி தர அவருக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தை பொறுத்து எந்த உரிமையும் எனக்கு ஏற்படாது என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி தான் வழக்குசொத்தின் சுவாதீனத்தில் உள்ளார் என்றும், அவரது சுவாதீனத்திற்கு இடையயூறு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யான தகவல் கூறி உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், நான் சுவாதீனத்தில் இல்லாமல் பரிகாரம் கோரியுள்ளதால் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd.M.Santhosham
District Munsif, Sulur